# விடியல்

## The Dawn

இதழ்-88, ஆகஸ்டு-2016


கௌரவ ஆசிரியர்

முனைவர் வே. இராதாகிருஷ்ணன்

கல்லூரி முதல்வர்

ஆசிரியர்

முனைவர் சி. ஆர். சுரேஸ்

துறைத்தலைவர்

இணையாசிரியர்

முனைவர் ம.லோகேஸ்வரன்

ஆசிரியர் குழு

திரு. வீ. முருகானந்தம்

முனைவர் த. கண்ணன்

திருமதி. சு. சாந்தி

திரு. ப. ராஜேஷ்

முனைவர் து. சரஸ்வதி

முனைவர் பா. ராஜேஷ்

முனைவர் கோ. ரவிச்சந்திரன்

முனைவர் ந. சங்கீதா

திரு. செ. தங்கராஜ்

திரு. மு. சதீஸ்குமார்

முனைவர் சு. முப்பிடாதி

முனைவர் ப. பிரதிபா

திரு. சத்தியராஜ்

திரு.சிலம்பரசன்


### தலையங்கம்

## எது சுதந்திரம்..?

இந்திய நாடு தனது 70 ஆம் ஆண்டு சுதந்திர தின விழாவைக் கோலாகலமாகக் கொண்டாடிக் கொண்டிருக்கிறது. முற்றிலும் தனக்கான அடையாளங்களைத் தோலுரித்துக் கொண்டு புதிய விடியலைத் நோக்கி நகர்கிறது. ஆனால் எது உண்மை? இந்திய தேசத்தின் பெருமைகளை இந்தியர்கள் முதலில் கொண்டாட வேண்டும். ஆனால் சமூக வலைதளங்களில் இன்றைய இளைஞர்கள் இந்திய தேசத்தின் மாற்றுக் குரல்களாக ஒலித்துக் கொண்டிருக்கின்றனர். இந்தியாவின் மீதான நம்பிக்கைகள் நாளுக்கு நாள் அதிகரிக்கிறதா? குறைகிறதா?

© K.S. Rangasamy College of Arts and Science (Autonomous)


வெளியீடு:

**தமிழ்த்துறை,**

**கே.எஸ்.ரங்கசாமி கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி)**

**திருச்செங்கோடு–637215. தமிழ்நாடு, இந்தியா.**

**Fb:** facebook.com/ksrcasthamizh.vidiyal

**Blog:** ksrcasthamizh.blogspot.in **E-mail:** vidiyalmagazhine@gmail.com

**Website:** ksrcas.edu


All rights reserved. No part of this publication may be reproduced, stored in a retrieval system or transmitted in any form or by any means electronic, mechanical, photocopying, recording or otherwise without the prior written permission of the publisher.

இந்திய தேசம் ஆங்கிலேயரின் கட்டுப்பாட்டில் இருந்த காலக்கட்டங்களில் அத்துனை வளங்களையும் தன்னிடத்தே கொண்டிருந்தது. அவ்வளங்கள் முறையாகவும் சீராகவும் பரிமாற்றம் அடைந்து கொண்டிருந்தன. சட்டங்கள் சமமாக்கப் பட்டிருந்தன. உண்மைக்கும் நியாயத்திற்கும் இடம் விட்டுச் செல்லப்பட்டது. ஆங்கிலேயர் அதனைக் கடைப்பிடிக்கவில்லை என்பது ஒருபக்கம் இருக்கட்டும். ஆனால் விட்டுச் சென்ற ஏராளமான கொள்கைகளும் சட்டங்களும் மனித உரிமைகளும் இன்று உலகளாவிய சக்திகளாக சான்று பகிர்கின்றன. இங்குப் பிரச்சினை என்னவென்றால் ஆங்கிலேயனின் கொள்கைகளையும் கடைப்பிடிக்கவில்லை. தனக்கான அடையாளங்களிலும் செயல்படவில்லை என்பதுதான். இந்தியா என்கிற தேசம் கலாச்சாரம், பண்பாடு, சமத்துவம், ஜனநாயகம் முதலானவற்றிற்குச் சான்றாகத் திகழும் தேசம். நாட்டில் ஒருமைப்பாடு சீர்குலைகின்றது என்றால் கல்விக்கொள்கையை மாற்ற முயற்சிக்கலாம். சாதியப் பிரச்சனைகள் உருவெடுக்கிறது என்றால் வேலைவாய்ப்பை உறுதிசெய்யும் திட்டங்களை செயல்படுத்தலாம். விவசாயம் அழிகிறது என்றால் பொருளாதாரக் கொள்கையை மாற்றியமைக்கலாம். மாற்றங்கள் பல புரட்சிகளை ஏற்படுத்தியிருக்கிறது.

1947 ஆம் ஆண்டிற்குப் பிறகு நம் கையில் தவழும் சுதந்திரக் குழந்தை ஒரு தத்துக்குழந்தையாகத் தவித்து வருகின்றது. அது நம் குழந்தை. ஆம் நம் அனைவரின் குழந்தை. அரும்பாடுபட்டு குழந்தையைப் பெற்றெடுத்தால் மட்டும் போதுமா? யார் பொறுப்பேற்பது? யார் கண்ணும் கருத்துமாக வளர்ப்பது? நாம் தான். இந்தியக் குடிமகன்களாகிய நாம் ஒவ்வொருவரும்தான

# உள்ளுறை


கவிதைகள்-------------------------------------- 4-17

ஓவியங்களும் குறிப்புகளும்----------- 18-22

பழமொழி------------------------------------------ 23

சொல்லுங்கள் பார்க்கலாம்--------- 24,29

## வாழவைத்த பாரதம்

இந்தியத் துணைக்கண்டத்தில்
சுதந்திரம் என்னும் சூரியன்
தோன்றிய நாள் ஆகஸ்டு 15
நாட்டுப் பற்று என்னும்
அணையாத நெருப்பை
அடைகாத்த இதயக் குருவிகளின்
உழைப்பில் தோன்றிய
நமது சுதந்திரத்தையும்
நம் பாரத தாய்த்திருநாட்டையும்
வாழ வைக்க
நம் உயிரைக் கொடுத்தேனும் பாதுகாப்போம்
நம்மைத் தாலாட்டி வளர்த்த
நம் பாரத தாயின் திருவடிகளை
வணங்குவதற்கு மீண்டும்
பிறப்போம் தமிழனாக..
பண்டமாற்று முறை செய்து
பிற நாட்டை வாழ வைத்த பாரதம்
நான் அல்ல நாம்
என்ற சொல்லைக் கற்றுக் கொடுத்த
எங்கள் பாரதத்திற்கு வேண்டும்
மீண்டும் ஆங்கிலேயர்கள்..
நாம் அடிமையாவதற்கல்ல
அனைவரும் ஒன்று கூடுவதற்கு..

*கோ.தமிழ்ச்செல்வி*
*தமிழிலக்கியம் முதலாமாண்டு*

# ஆனந்த சுதந்திரம்

முந்நூறு நாட்கள் கழித்துப் பிறந்த குழந்தை
உலகைப் பார்த்தது இங்கே
முந்நூறு ஆண்டுகளாய் என்
சுதந்திரத் தாய் சேய்களிடத்தில்
ஒற்றுமையின்மையால் பிளவுபட்டு
அந்நிய மனிதனால்
நமது சொந்த மண்ணில்
அடிமைகள் ஆக்கப்பட்டது
கொடுமையிலும் கொடுமை..
ஒன்று பட்டால் உண்டு வாழ்வு
இங்கே ஒன்று பட்டதனால்
உண்டானது சுதந்திரம்..
வேற்றுமையில் ஒற்றுமை கொண்ட
ஒரே நாடு எங்கள் பாரத நாடு
சுதந்திர இந்தியாவில்
உங்கள் உயிர்க்கு மட்டும் சுதந்திரம்.
முன்னோர் வாங்கி தந்த சுதந்திரத்தால்
அவர்களின் ஆத்மாக்கள்
இன்னும் நம்மைக் கண்ணுற்றிருக்கின்றன..
சுதந்திரம் கிடைக்கும் முன்னே
ஆடிப் பாடி ஆனந்த சுதந்திரம் பெற்றுவிட்ட
உணர்ச்சிக் களிப்பில் ஆரப்பரித்தான் பாரதி..
வல்லரசே தனது கனவு என்று கூக்குரலிட்டார்

இளையோர் நாயகன் அப்துல் கலாம்..
அகிம்சையைப் பின்பற்றச் சொன்னார்
உத்தமர் காந்தி..
இருந்தாலும் இந்தியத் தாயின்
கண்ணீரை நாம் துடைத்தெறிந்த பாடில்லை..
முதலில் ஒன்றுசேர்வோம்
பின்னர் உயர்த்தப் பாடுபடுவோம்
நம் தேசத்தை…!

*ப.மோகன் - முதலாமாண்டு*
*உயிர்த்தொழில் நுட்பவியல் அ பிரிவு*

## இன்றைய பாரதம் இளையோர் பாரதம்

என் பாரத சுதந்திரம் என்பது
வெறும் சுதந்திரம் அல்ல..
அது என் விடுதலை வீரர்களின்
வேட்கை.. தீரா வேட்கை..
இந்த தாகம் வெறும் தவிப்பு அல்ல
அது என் சுதந்திர நாட்டின்
வெற்றி வேகம்..
பல தியாகம் நிகழ்ந்தும்
இன்னும் தீரவில்லை
அவர்களின் தாகம்..
ஆயிரம் உயிர்கள் மாய்ந்தாலும்
அவை மண்ணுக்கு உரமாகவில்லை
விதையாகவே உள்ளது..
என் இளைய பாரதம் யாவும் அறியாக் கதைகள்

இந்த விதைகள்..

இந்த விதைகள் வளர

நீர் தேவையில்லை

என் இளைஞர்களின் வியர்வை போதும்..

இவ்வியர்வையின் மூலம்

என் நாட்டின் உயர்வைக் காணலாம்..

என் நாட்டின் உயர்வை உணர

நல்ல குணம் தேவையில்லை

நல்ல மனமே போதும்..

அது நாளைய பாரதம் இளையோர் கையில்

என்ற கோசத்தால் முடியும்..

*S.பாஸ்கரன் - மூன்றாமாண்டு*

*முதுநிலை கணினிப் பயன்பாட்டியல் துறை*

## ஆனந்த சுதந்திரம்

காற்றில் பறக்கும் வீரக் கொடியே

என்னைச் சுமந்த தொப்புள் கொடியே

உதிரங்கள் சிந்தி உரிமைகள் வாங்கினோம்

உயிரைக் கொடுத்து தாய் நாட்டைக் காப்போம்

உடலைத் தரையாக்கி

உதிரத்தை நீராக்கி

வீரத்தை மொழியாக்கி

உயிரைச் சுவடாக்கி

கட்டி எழுப்பப்பட்ட சுதந்திரத்தின் கோபுரம்

எங்கள் உயிரிலும் மேலானது நம் பாரத நாடு..

தம் உதிரம் சிந்த இம்மண்ணிற்குச்

சுதந்திரம் மட்டும் வாங்கித் தரவில்லை
சுயமரியாதையையும் கூட..
இம்மண்ணில் சுதந்திரத்தைப் பெற்றுத் தந்த
என் தலைவர்களின் பெருமையை – நாம்
தலைநிமிர்ந்து போற்றுவோம்..
புது நாளில் உதயமாகும் கீதம் கேட்டுத்
தென்றலில் வீரமாய் பறக்கிறது
எங்கள் தேசியக் கொடி..
அந்நாளில் காந்தி சிந்திய
கண்ணீர் என்னும் மௌனமான ஓசை
இன்று சுதந்திர கீதமாக மாறியது..
காற்றைப் போன்ற தாய்நாட்டிற்குக்
கைவிலங்கிட இனிமேல் முடியாது..
அச்சமில்லை அச்சமில்லை என்று
நெஞ்சை நிமிர்த்தி நிற்கின்றோம்..
போராடக் கற்றுக் கொண்டேன் – என்
தேசத்தைக் காப்பாற்றிய தலைவர்களைப் போல
என்றும் அவர்களே எனது கதா நாயகர்கள்..

*B.ஹேமலதா*
*மூன்றாமாண்டு நுண்ணுயிரியல் துறை*

## வெளிச்ச இந்தியா..

சுதந்திரமாகச் செயல்பட்டுச்
சுதந்திரம் கண்ட இந்திய நாடு
இருள் சூழ்ந்த இந்திய நாடு

வெளிச்சத்திற்கு வந்த நாள் ஆகஸ்டு 15
ஆங்கிலேயரை ஓட விட்டு
பாடுபட்டுப் பெற்ற சுதந்திரம்
ஆனந்த சுதந்திரம்..
முந்நூறு ஆண்டுகளாக
அடிமைப்பட்ட மக்கள்
விழித்து எழுந்த நாள்..
தலைவர்களும் மக்களும்
சிந்திய கண்ணீருக்கு விடை கிடைக்கப் பெற்ற
அந்தி மாலையில்
குயிலின் ராகம் போல இனிமையானது..
அடிமைப்பட்டக் கண்ணீரை விட
சுதந்திரக் கண்ணீர் இனிமையானது..
ஒவ்வொரு துளி இரத்தத்திற்கும்
துளித் துளி வெற்றியாய்க் கிடைத்த சுதந்திரம்..
இது எழுபதாம் ஆண்டுச் சுதந்திரம் அல்ல
எழுச்சிமிகு சுதந்திரம்..

*மோ.சோனியா*
*தமிழிலக்கியம் முதலாமாண்டு*

## தேசப்பூ..!

மூவர்ணங்களில் பூத்துக் குலுங்கும்
தேசப் பூக்கள் எம் இளைய பாரதம்..
நீ இளைத்திட வேண்டாம்
பிறருக்கு உணர்திடுவாயாக..
புது இன்மையை அனைவர்

மனதில் புகுத்திடவாயாக..

இளைஞர்கள் ஒன்றுபட்டால்

உண்டு வாழ்வு..

இளைய இந்தியாவின்

உணர்வுகள் யாம்..

கத்தியின்றி செய்வது யுத்தமல்ல

கத்தியின் மேல் நின்று கூட

எ ம் இளைஞர்கள் செய்வார்கள்

என் பாரதத் தாய்க்காக..

சிறுவனாக இருந்தாலும்

சிந்தித்துச் சிறப்பிக்க மறக்கமாட்டோம்..

நாங்கள் இளைய பாரத்தின் உதிரிப்பூக்கள

ஆனால் ஒரு போதும் உதிர்ந்துவிட மாட்டோம்..

*A.சந்தோஷினி*

*இரண்டாமாண்டு ஆங்கிலத்துறை*

## இளைஞனும் இந்தியாவும்..

இளைஞனே! விழித்தெழு

உன் சோம்பலைக் கலைத்தெழு..

இளைஞர்களின் எழுச்சியே

நாட்டின் வளர்ச்சி..

முடியும் என்று முன்னேறு

நீயே வெற்றியின் வரலாறு..

முடியாது என்பதை உடைத்துத்

தோல்விகளை விடுத்து

வெற்றிகளைப் படைத்திடு..

சாதிகளை எதிரியாக்கிச்

சமத்துவத்தை நண்பனாக்கி

ஒற்றுமையில் செயல்படு..

முடியும் என்றால் முயற்சி எடு..

முடியாது என்றால் பயிற்சி எடு..

முயன்று விளையாட்டில் கால்பதித்திடு..

முயன்றால் விண்வெளியில் கால் வைத்திடு..

கனவு நாயகனின் கனவை நனவாக்கி

உன் முயற்சிகளைத் தயாராக்கி

உன் வெற்றிகளைச் சாதனையாக்கு..

நீ முயன்றால் உலகம் உன் வசம்..

முயன்று வரலாற்றைப் படித்திடு

இயன்றால் வரலாற்றைப் படைத்திடு

முடிந்தால் வரலாறாக வாழ்ந்திடு..

*இ.கிறிஸ்டினா*

*இரண்டாமாண்டு – ஆங்கிலத்துறை*

## ஆனந்தக் காற்று..

சில்லென்ற காற்று

நம்மைச் சிலிர்க்க வைக்கும் காற்று

அலையடித்து மோதும் காற்று

அதுவே நாம் சுவாசிக்கின்ற ஆனந்த சுதந்திரக் காற்று..

பாரடா தோழா..!

பாரில் நடக்கும் அதிசயங்களை..

மனிதக் கூட்டம் இங்கே

மல்லாந்து படுத்துறங்க

குள்ளநரிக் கூட்டமொன்று நம்மை ஆளுதடா..!
ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோம் என்று
பாடிச் சென்ற பெரியோர்களே..!
பாருங்கள் உங்கள் ஆனந்த சுதந்திரத்தை
அது அதிகார வர்க்கத்திற்குத்
தலை சீவிக் கொண்டிருப்பதை..!
ஆற்றுமணலைத் தோண்ட தோண்ட
நீர் சுரக்கும் என்றான் வள்ளுவன்
இங்கும் நீர் சுரந்து கொண்டுதான் இருக்கிறது
ஆற்று மணலில் அல்ல
எம் ஏழை மக்களின் அடிவயிற்றில்
அளவுக்கதிகமாக..!
நம் நாட்டுக்குக் கிடைத்த சுதந்திரம்
அது இன்னும் ஆகவில்லை நிரந்தரம்
இளைஞர்கள் அதை காக்க வேண்டும் பத்திரம்
அதனால் மாறுமே இந்தியாவின் சரித்திரம்..!

*சே.கமலி*
*உயிர்த்தொழில் நுட்பவியல் அ பிரிவு*

## இன்றைய பாரதம்

விண்ணதிர மண்ணதிர
மலர்ந்தது சுதந்திரம்..
அடிமை விளக்கு அணைந்தது!
இந்திய அரசு அமைந்தது
எழுபது வருடம் ஆகியது..
கம்பத்தில் கொடி ஏற்றி

காகிதக்கொடி நெஞ்சில் தாங்கி
கொடுத்த மிட்டாய் வாயில் போட்டு
கரைவதற்குள் மறைந்து விடும்
நாட்டை பற்றிய சிந்தனை..
நமக்கென்று ஒரு குடும்பம்
தனக்கென்று சில ஆசைகள்
இடையில் எதற்கு நாடு?
தலைவர்கள் சுயநலம் நினைத்திருந்தால்
சுதந்திரம் நமக்கேது..?
உயிர்கொடுக்க வேண்டாம்
உண்ணாவிரதம் வேண்டாம்
செக்கிழுக்க வேண்டாம்
சிறை செல்ல வேண்டாம்..
உன் மூளையை அண்டை நாட்டுக்கு
அடகு வைக்காமல் இரு..
சொந்தமெல்லாம் இங்கிருக்க
தொழில் எதற்கு வேறுநாட்டில்..?
உன் நாடு கொடுத்த அறிவை
உன் நாட்டுக்காகவு பயன்படுத்து..
என் மக்களுக்கு வேலை கொடு..
ஒருவனாக இருந்த நீ
தலைவனாகு..
நாடும் முன்னேறும்
அதிலுள்ள உன் வீடும் முன்னேறும்..!

*A.முரனிதரன்*
*உயிர்த்தொழில் நுட்பவியல் அ பிரிவு*

## ஆனந்த சுதந்திரமா..?

இன்று சுதந்திர தினமாம்
பூட்டி வைத்த தேசியக் கொடியை
எடுத்துத் தூசி தட்டி
ரத்தம் சிந்தியவர்களைப் பற்றிச்
சத்தம் போட்டு முழங்கிவிட்டு
இனிப்பு வழங்கி
அருமையாகச் சுதந்திர தினத்தைக்
கொண்டாடிவிட்டு
அத்துடன் மறந்து போவதுதான் சுதந்திரமாம்..
பாரதி இருந்தால் இப்படித் தான் பாடியிருப்பார்
Bar க்குள்ளே நல்ல நாடு
எங்கள் பாரத நாடு..
ஊர் இரண்டு பட்டால்
உண்டு வாழ்வு..
அச்சமில்லை அச்சமில்லை
அச்சமென்பதில்லையே
அக்கிரமங்கள் செய்வதற்கு
அச்சமென்பதில்லையே..!
காக்கை குருவி எங்கள் ஜாதி
அதை அழிப்பது தான் எங்கள் நீதி..!
ஓடி விளையாடு பாப்பா
நீ ஓயும் வரை வீடியோ கேம்
விளையாடு பாப்பா என்று..
ஆனால் துயரின்றி நாம் வாழ

துன்பம் பல கண்டவர்களும்
ஒய்யாரமாய் நாம் வாழ
உயிர்விட்ட சிங்கங்களும்
மானத்தோடு நாம் வாழ
செக்கிழுத்த செம்மல்களும்
சுதந்திரமாய் நாம் வாழ
சண்டையிட்ட மறவர்களும்
அன்று வந்தே மாதரம் என்றதற்கு
வாங்கிய அடிகள் எத்தனையோ..?
ஜெய்ஹிந்த் என்று சொன்னதற்கு
சிறை சென்ற ஆண்டுகள்
எத்தனை எத்தனையோ..?
கொட்டிய குருதி கொஞ்சமல்ல
சிந்திய கண்ணீருக்குப் பஞ்சமில்லை..
சாதியா நம் ஒருமைப்பாடு?
மதமா நம் ஒற்றுமை?
உண்மைதான் நம் பண்பு
உழைப்பு தான் நம் தெம்பு
அன்பு ஒன்றுதான் நம் பிணைப்பு
அஹிம்சை என்ற ஆயுதத்தால்
விரட்டிவிட்டோம் ஆங்கிலேயனை..
சூரியனுக்கு இரவில் சுதந்திரமில்லை
சந்திரனுக்குப் பகலில் சுதந்திரமில்லை
பளிச்சென்ற பகலிலும்
பனிவிழும் இரவிலும்

நமக்கு உண்டு சுதந்திரம்
ஆங்கிலேயனிடம் அடிமையானது
அறியாமையினால்..!
வளமையை விட்டது புரியாமையினால்..!
மிஞ்சியவற்றை அந்நியனுக்கு விற்காமல்
வளம் பெருக்கி வானுலகம்
போற்ற வல்லரசாக்கி நிறுத்துவோம்..
தியாகத்தைக் காவியிலும்
தூய்மையினை வெண்மையிலும்
பசுமையினைப் பச்சையிலுமாய்
வகுத்திட்ட தேசம்...
வீரத்தைக் காவியிலும்
சத்தியத்தை வெண்மையிலும்
நம்பிக்கையைப் பச்சையிலுமாய்
தொகுத்திட்ட தேசம்..
அர்ப்பணிப்பைக் காவியிலும்
அன்புதனை வெண்மையிலும்
செம்மையினைப் பச்சையிலுமாய்
அமைத்திட்ட தேசம்..
இந்துவத்தை காவியிலும்
கிறிஸ்துவத்தை வெண்மையிலும்
இஸ்லாமைப் பச்சையிலுமாய்
ஒன்றிணைத்த தேசம்..
நள்ளிரவில் சுதந்திரம் பெற்றோம்
விடியலை நோக்கிச் செல்கின்றோம்

வேகம் கொஞ்சம் குறைவுதான்
ஆனாலும் தளர்ச்சி கண்டதில்லை
தயங்கி நிற்கப் போவதுமில்லை
பயணம் என்றும் தொடரும்
விடியலை வென்று காண்போம்
ஆம் அதுவே சுதந்திரம்
நாம் பெறும் ஆனந்த சுதந்திரம்..!

*K.நவீன்குமார்*
*உயிர்த்தொழில் நுட்பவியல் அ பிரிவு*


## அருமை

பட்டாசெல்லாம் கரியாகி
பலகாரமெல்லாம் ஜீரணமாகி
புத்தாடையெல்லாம்
அழுக்கான பிறகு தான்
அருமை புரிகிறது
அடகு வைத்த
அம்மாவின் நகைகள்..

*சி.மோகனப் பிரியா*
*தமிழிலக்கியம் முதலாமாண்டு*

### பொன்மொழி

*உன்னைப்பற்றி ஒருவன் குறை கூறுகிறான் என்றால். அவனிடம் சென்று நான் நல்லவன் ரொம்ப நல்லவன் என்று உறுதிப்படுத்த முயற்சிக்காதே!. நாய் குலைக்கிறதே என்று அதனிடம் காரணம் சொல்லிக்கொண்டிருப்பாயா? எதையும் காதில் போட்டுக் கொள்ளாமல் இலக்கை நோக்கிப் பயணித்துக்கொண்டே இரு..*




இந்திய தேசத்தின் மரத்தின் வேர்களில் நம் விடுதலை வீரர்களின் ரத்தங்கள் பாய்ந்து கொண்டிருக்கின்றன. நாம் அந்த மரத்தின் நிழலில் தான் இன்று இளைப்பாறிக் கொண்டிருக்கிறோம். தண்ணீர் விட்டா வளர்த்தோம் சர்வேசா நம் கண்ணீர் விட்டல்லவா வளர்த்தோம் என்றான் பாரதி. நம் வசதிக்காக தேசத்தின் ஒருமைப்பாட்டைக் களைத்து விடாமல் ஒன்று பட்டால் உண்டு வாழ்வு என்று வாழ வேண்டும்

**ஜான்சிராணி லஷ்மிபாய்**

*பிறப்பு – 19.11.1828*
*பிறந்த இடம் – வாரணாசி*
*இறப்பு – 18.06.1858*
*கங்காதர் ராவ் என்பவரை மணமுடித்து லட்சுமிபாய் என்ற பெயருடன் இல்லற வாழ்க்கையை நடத்தினார். பிறந்த நான்கு மாதங்களுக்குள் அவர்களது குழந்தை தவறிப்போனது.*
*பிறகு தாமோதர ராவ் எனும் குழந்தையைத் தத்தெடுத்து வளர்த்தனர். இதனால் பகைமை மூழ அண்டை நாடுகளுடன் படையெடுத்து. போர்புரிந்து 1858 இல் இறந்தார்.*










*சனவரி 23, 1897 ஆம் ஆண்டு மேற்கு வங்கத்தின் கட்டாக் எனும் பகுதியில் பிறந்தார். தனது மேற்படிப்பைக் கல்கத்தா பல்கலைக்கழகத்திலும் கேமபிரிட்ஜ் பல்கலைக்கழகத்திலும் நிறைவு செய்தவர்.இந்திய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபாடு கொண்டு இரண்டாம் உலகப் போரின் போது இந்திய தேசிய இராணுவத்தை உருவாக்கினார்.அசாத் இந்து தலைவர், இந்திய தேசிய இராணுவத்தின் சம்பிரதாய தலைவர் முதலான பதவிகளில் வகித்தவர்.இந்திய தேசிய காங்கிரசு, பார்வார்டு பிளாக் முதலான அரசியல் கட்சிகளை நடத்தியவர். மனைவியின் பெயர் எமிலி செங்கல். ஆகஸ்டு 18, 1945 ஆம் ஆண்டு காலமானார்.*

## பகத்சிங்




*28.09.1907* ஆம் ஆண்டு பஞ்சாப் மாநிலத்தின் லயால்பூர் நகரத்தில் பிறந்தார்.நாவுஜவான் பாரத் சபா, கீர்த்தி கிசான் கட்சி, இந்துசுதான் சோசலிசக் குடியரசு அமைப்பு முதலான இயக்கங்களை வழி நடத்தினார். இந்தியாவின் முதல் மார்க்சியவாதி என்று சிலர் குறிப்பிடுகின்றனர். லாலா லஜபதி ராய் எனும் காங்கிரஜ் தலைவரின் இறப்புக்குக் காரணமாயிருந்த காவலதிகாரியைச் சுட்டுக் கொன்ற குற்றத்திற்காகப் பகத்சிங் 24 வது வயதில் தூக்கிலிடப்பட்டார்





## திருப்பூர் குமரன்

இவர் 1904 ஆம் ஆண்டு ஈரோடு மாவட்டத்தில் உள்ள சென்னிமலை எனும் ஊரில் பிறந்தார்.பெற்றோர் – நாச்சிமுத்து, கருப்பாயி. மணைவி – ராமாயி. 1932 ஆம் ஆண்டு சட்ட மறுப்பு இயக்கம் மீண்டும் தொடங்கிய போது திருப்பூரில் தேசப்பந்து இளைஞர் மன்ற உறுப்பினர்களால் ஏற்பாடு செய்திருந்த மறியல் போராட்டத்தில் தீவிரமாகச் செயல்பட்டுக் காவலர்களால் தாக்கப்பட்டு கையில் கொடியுடன் மயங்கி வீழ்ந்தார். பின்னர் மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி காலமானார்.





## இந்திரா காந்தி

இந்திரா பிரியதர்ஷினி நேருவே பிற்காலத்தில் இந்திரா காந்தி என்றழைக்கப் பட்டார். ஃபெரொஸ் காந்தியைத் திருமணம் முடித்த பின்பு இவ்வாறு பெயர் மாற்றம் நிகழ்ந்துள்ளது. இந்தியாவின் மூன்றாவது பிரதமர். ஜவஹர்லால் நேருவின் மகள். சீக்கியர்களுக்கு எதிராகச் சில செயல்களில் ஈடுபட்டதால் தனது சொந்த பாதுகாவலர்களான சீக்கியர்களால் *31.10.1984* ஆம் ஆண்டுசுட்டுக் கொல்லப்பட்டார்.



## மகாகவி சுப்பிரமணிய பாரதியார்

*11.12.1882* ஆம் ஆண்டு தூத்துக்குடி மாவட்டம் எட்டயபுரத்தில் பிறந்தார்.கவிஞராகவும் பத்திரிகைஆசிரியராகவும் விடுதலைப் போராட்ட வீரராகவும் திகழ்ந்தவர். பாஞ்சாலி சபதம், கண்ணன் பாட்டு, குயில்பாட்டு எனப் பல கவிகைளை இயற்றியவர். இளம் வயதிலேயே கவி பாடும் ஆற்றல் பெற்றவர். ஆங்கிலேயருக்கு எதிராக நாட்டுப்பற்றை வெளிப்படுத்தக் கூடிய பல பாடல்களைப் பாடிய பாரதி *11.111921* ஆம் ஆண்டு காலாமானார்.




**காந்தியடிகள்**

*02.10.1869 ஆம் ஆண்டு போர்பந்தரில் பிறந்தவர். 30.01.1948 ஆம் ஆண்டு காலமானார். லண்டன் பல்கலைக்கழகத்தில் மேற்படிப்பை நிறைவுசெய்தவர். இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியை வழிநடத்தியவர்.மனைவி கஸ்தூரிபாய். உப்புச்சத்தியாக்கிரகம், ஒத்துழையாமை இயக்கங்களை நடத்தி அஹிம்சை முறையில் நாட்டு விடுதலைக்குப் போராடி வெற்றியடைந்தவர். இந்திய தேசத்தின் விடுதலைக்கு மிக முக்கிய பங்காற்றியதால் இவரை மஹாத்மா என்றழைப்பர்“*

# பழமொழி

*சென்ற இதழின் தொடர்ச்சி..*

*201)நாயிடத்தில் முழுத் தேங்காய் தங்குமா?*

*202)மூடனுக்குக் கோபம் மூக்கின் மேல்*

*203)உண்ட கலைப்பு தொண்டனுக்கும் உண்டு*

*204)கடல் பெருகினால் கரை ஏது?*

*205)முதுமை ஆராய்கிறது இளமை துணிகிறது*

*206)முதுமை துயரத்தோடு சேர்ந்து பயணிக்கும் பயணி*

*207)முதுமை பக்குவத்தின் அடையாளம்*

*208)பணம் இல்லாதவன் பிணம்*

*209)உபசரியாதார் வீட்டிலே உண்ணாதிருப்பது கோடி தனம்*

*210)அழுதாலும் பிள்ளையை அவள் தான் பெற வேண்டும்*

211)போதனை பெரிதோ, சாதனை பெரிதோ?

212)நெல்லுக்கு உமி உண்டு. நீருக்கும் நுரை உண்டு

213)நல்ல மாட்டிற்கு ஒரு சூடு. நல்ல பெண்ணிற்கு ஒரு சொல்

214)சுடர் விளக்காயினும் தூண்டுகோல் வேண்டும்

215)நற்குணமே நல்ல ஆஸ்தி

216)கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளில் தெரியும்

217)நா அசைய நாடு அசையும்

218)மலை இலக்கானால் குருடனும் எய்வான்

219)குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும்

220)ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு

221)அவசரக் கோலம் அலங்கோலம்

222)உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகாது

223)உதடு பழஞ்சொறிய உள்ளே வயிறெறிய

224)அடி நாக்கில் விஷம் நுனி நாக்கில் தேன்

225)பசியுள்ளவன் ருசி அறியான்

226)நடுத்தெரு பிச்சைக்கு நாணயம் பார்க்கலாமா?

227)விளையாட்டு வினையானது

228)திருடிக் கொடுத்தும் பைத்தியக்காரப் பட்டம்

229)அகல் வட்டம் பகல் மழை

230)பொய் சொன்ன வாய்க்குப் போஜனம் கிடையாது

231)சிறிய மனிதரிடத்தில் பெரிய உள்ளம் இருக்கலாம்

232)சிறு தீப்பொறி காட்டையும் எரிக்கும்

233)ஆயிரம் கலம் நெல்லுக்கு ஒரு அந்துப் பூச்சி போதும்

234)சிறு துளை பெருங்கப்பலை மூழ்கடிக்கும்

235)நூற்றைக் கெடுத்தது குருணி

236)காய்ந்த முள்ளும் விறகுக்கு ஆகும்

237)மனத்திலே ஒன்று வாக்கினிலே ஒன்று

238)தடி எடுத்தவனெல்லாம் தண்டல்காரனா?

நாமம் போட்டவனெல்லாம் நாதனா?

239)வெளுத்ததெல்லாம் பாலா? கறுத்ததெல்லாம் தண்ணீரா?

240)வல்லான் வகுத்ததெ வாய்க்கால்

241)கோபத்தால் ஆகாதது குணத்தால் ஆகும்

242)குனியக் குனியக் கொட்டுப்படுவான்

243)கரும்பு ருசியென்று வேரொடு பிடுங்கலாமா?

244)கொல்கிறதும் சோறு. பிழைப்பிக்கிறதும் சோறு

245)அன்றைக்கே எவரும் ஆசானாக முடியாது

246)கோடி வித்தையும் கூழுக்குத்தான்

247)ஆறிலும் சாவு நூறிலும் சாவு

248)இறைச்சியெல்லாம் மானிறைச்சியாகுமா?

249)மனம் கொண்டது மாளிகை

250)சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளை

----தொடரும்

*A.மேனகா-இரண்டாமாண்டு இ பிரிவு*

*வணிகக் கணினிப் பயன்பாட்டியல்*

## சொல்லுங்கள் பார்க்கலாம் – 2

1)நந்தகோபனின் நாமம் என்ன?

கோவிந்தன்

2)நந்தகோபனின் மனைவி பெயர்?

கோதாவரி

3)வேடர் ஒரு நொடியில் ஓடியது எதற்கு உவமை?

பொது மகளிரின் மனம்

4)பறவைகள் இனங்களின் அரசனாகச் சாத்தனார் கூறுவது?

அன்னப்பறவை

5)வாலி எழுதிய பாரதக் கதைக் காவியம் எது?

பாண்டவர் பூமி

6)பஞ்ச காப்பியம் என்ற தொடரை முதன்முதலில் உருவாக்கியவர்?

மயிலைநாதர்

7)காதல் காதல் காதல், காதல் போயின் காதல் போயின் சாதல் எனும் அடிகள் இடம்பெறும் நூல் எது?

குயில்பாட்டு

8)ருத்திரகாண்டம் எழுதியவர் யார்?

ஒட்டக்கூத்தர்

9)தமிழ்மொழியில் பெரும்பாலும் சொற்றொடர்கள் எதில் தொடங்கும்?

எழுவாய்

10)இக்காலம் மலையாளம் பேசும் நிலப்பகுதியின் பழைய பெயர்?

சேரநாடு

*M.காயத்ரி - இரண்டாமாண்டு*

*துகிலியல் மற்றும் ஆடை வடிவமைப்புத் துறை*

# நர்.சரண்யா கவிதைகள்

**வீதிமரத்தின் வேண்டுதல்**

மனிதனின் தாகத்திற்குப் பானமாய்
பசிக்கு உணவாய்
உடுத்த உடையாய்
வசிக்க வீடாய்
நோய்க்கு மருந்தாய்
சுவாசிக்கும் காற்றாய்

குழந்தைக் கொடி முதல்
சாகும் சாம்பல் வரை
தொட்டிலாய் நடைவண்டியாய்
விளையாட்டுப் பொம்மையாய்
கட்டிலாய் கலமாய் விசிறியாய்
ஊன்றுகோலாய்
கடைசிக் கம்பாய்
உடன் வரும் நான்
ஒருபோதும் உங்களுக்குத்
தொல்லைகள் தந்ததில்லை..
நீங்கள் வாழும் வரைக்கும்
நான் காவலாய் வருகிறேன்
காவல் காத்த என்னைக்
கருவறுப்பது நியாயமோ..?

**அறியாமை**

சிறைப்பட்ட கிளியிடம்
எதிர்காலம் கேட்கிறான்
சுதந்திர மனிதன்..

**விவசாயம்**

விவசாயம் இந்தியாவின்
முதுகெலும்பு என்றார்கள்
அதனால்தான்
யாரும் திரும்பிப் பார்ப்பதில்லையோ..?

**கல்லூரி**

கல்லூரி என்பது

போதிமர நிழல்
படுத்து உறங்குவதும்
புத்தனாவதும்
உந்தன் கையில்..

**<u>கவிதை</u>**

ஆண்களாலும்
பிரசவிக்க முடிந்த
குழந்தை
கவிதை..

**<u>கருப்பு</u>**

கருப்பு அறியாமையின்
அடையாளம்
எவன் சொன்னது?
கரும்பலகை
அறிவின் வெளிச்சமல்லவா..?

**<u>இமைகள்</u>**

விழிகளின்
போர்வைகள்..

## அன்புள்ள மகனுக்கு

*நீ பிறந்துவிட்டதாகக் கேள்விப்பட்டேன்..*
*வளம்பெறவும் வளரவும் அப்பாவின் வாழ்த்துகள்..*
*தாலிகட்டிய மூன்றே மாதத்தில்*
*அரபுநாடு என்னை அழைத்துக்கொண்டது*
*உன் அம்மாவே இந்நேரம் என்முகம் மறந்திருப்பாள்*
*என்னை அப்படியே உறித்து வைத்திருப்பதாக*

உன் அம்மா சொன்னாள்..
கண்ணும் மூக்கும் உன் அம்மா மாதிரியாம்
என் அப்பா சொன்னார்...
முன் கோபத்தில் என் அப்பா மாதிரியாமே
என் அம்மா சொன்னாள்..
சிரித்தால் புருவங்கள் உயருவது
நீ என் தாய்மாமன் மாதிரியாம்..
இப்படி என் உறவுகளைத் திரட்டிக்கொண்டு
உருக்கொண்ட உன்னை
நெற்றி முத்தமிட்டு
நெஞ்சுக் குழியில் புதைத்துக் கொண்டு
ஆர அணைத்தபடி தூங்கி வருகிறேன்..
ஆயிரம் கதைகளை
நீ தூங்கிய பிறகும் சொல்லிக்கொண்டிருக்கிறேன்
கால்களைத் தொங்கவிட்டு
என் தோளில் உட்கார
உன் பிஞ்சுவிரல்களைப் பற்றிக்கொள்கிறேன்..
அம்மா என்று சொல்லிவிட்டாயாம்
அப்பா சொல்ல வாய்பார்த்திருக்கிறேன்..
தொலைவில் நான் இருந்தாலும்
நீ மூச்சுவிடும் நெடி என் முகத்தில் தெறிக்கிறது
தோளும் வாயும் கையும் கண்ணும் காத்திருக்கின்றன
உன்னைப் பற்றிய கனவுகளைச் சுமந்தபடி..
விரைவில் வருவேன்
அல்லது வருவேன் என்ற நம்பிக்கையில்

*உன் அப்பா..!*

*அகரன் - தமிழ்த்துறை*

## சொல்லுங்கள் பார்க்கலாம் – 3

1)எகிப்தியர்களின் முதன்மைக்கடவுள் யார்?

சூரியன்

2)மௌரிய சாம்ராஜியத்தின் தலைநகரம் எது?

பாடலிபுத்திரம்

3)பண்டைய ஆரியர்களின் மொழி எது?

சமஸ்கிருதம்

4)திருக்குரானில் உள்ள அதிகாரங்கள் எத்தனை?

114

5)உலகைச் சுற்றி வந்த முதல் கடற்பயணி யார்?

மெகல்லன்

6)மிகப்பெரிய நீர்ப்பறவை எது?

அன்னம்

7)நீரில் நீந்தும் தரையில் நடக்கும் வானில் பறக்கும் மீன் எது?

வார்னாய்

8)சக்கரவர்த்தி திருமகள் நூலை இயற்றியவர் யார்?

ராஜாஜி

9)தான் ஒரு தமிழ் மாணவன் என்று சொன்ன வெளிநாட்டவர் யார்?

ஜி.யு.போப்

10)சிவஞான போதம் என்ற நூலின் ஆசிரியர் யார்?

மெய்கண்ட தேவர்

## பள்ளி நண்பர்கள்

எத்தனை உறவுகளைக் கடந்து வந்தாலும்
இது போல ஒரு உறவு கிடைக்க
என்ன தவம் செய்தேனோ?
பள்ளி என்பதை மறந்தாலும்
பள்ளி என்பதை இழந்தாலும்
பள்ளி நண்பர்கள் உறவு என்றும் அழியாது..
எத்தனை பிறவி வேண்டுமானாலும் எடுக்கலாம்
எங்கு வேண்டுமானாலும் போகலாம்
ஆனால் நண்பர்களோடு வாழ்ந்த அந்தக் காலம்...?
ஆருயிர் நண்பர்களாக வாழ்ந்தோம்
ஓருயிர் தோழர்களாகக் கை குலுக்கினோம்
உணவுகளைப் பரிமாறிக்கொண்டு
ஓர் தட்டில் உண்டு மகிழ்ந்தோம்..
வாழக்கையில் எனக்கு ஒரே ஒரு வரம் வேண்டும்
அது என் பள்ளி நண்பர்களை மறவாத வரம் வேண்டும்..

*மு.உமாராணி*
*தமிழிலக்கியம் முதலாமாண்டு*

## வாழ்க்கையின் விதிமுறை

மழைத்துளி மண்ணோடு சங்கமிக்கிறது
மேகம் அழுகிறதா..?
நதி கடலோடு சங்கமிக்கிறது
மழை அழுகிறதா..?
உடல் இயற்கையோடு சங்கமிக்கிறது

மனிதன் ஏன் அழுகிறான்..?
மனிதம் புனிதமானது
அன்பையும் பாசத்தையும்
இரக்கங்களையும் பிரிவுகளையும்
சோகங்களையும் சந்தோசங்களையும்
கோபங்களையும் நற்குணங்களையும் கொண்டவன் மனிதன்
மனிதனின் இழப்பு வெறும் இழப்பல்ல
ஓர் வரலாற்றின் அடையாளம்..!

*கோ.தமிழ்ச்செல்வி*
*தமிழிலக்கியம் முதலாமாண்டு*

## குடிமகளே இல்லை..!

ஈன்றோரைத் துச்சமென நினைக்கும்
மகன்கள் சமுதாயம்..
தாய்மொழியைத் தாழ்வுபடுத்தும்
தமிழ்ச் சமுதாயம்
படிக்க வேண்டிய வயதில்
பகடை உருட்டும் மாணவர் மன்றங்கள்
பயிலவந்த மாணவியைப பாலியல்
கொடுமை செய்யும் பயில்வான் ஆசிரியர்கள்
சங்ககாலக் காதலையும்
பண்பாட்டையும் உடைத்தெறியும்
இக்காலத் திரைப்படங்கள்..
பசுமை நிலங்களை அழித்து
ஸ்மார்ட் சிட்டியாக்கும்
மனிதக் கரையான்கள்..

தாய்மொழியில் பேசுவதைக்
கௌரவக் குறைச்சலாய் எண்ணும்
மொழிப் பற்றாளர்கள்..
தாய்நாட்டின் விவசாயத்தை விட்டுவிட்டு
அயல்நாட்டின் ஐ.டிக்கு அடிமையாகும் அர்னால்டுகள்..
நேர்மைக்குத் தண்டனையும்
பொய்மைக்கு மரியாதையும் செலுத்தும்
மாண்புமிகு அரசியல்வாதிகள்..
கண்டதையும் பேஸ்புக் டுவிட்டரில் பரப்பும்
இண்டெர்நெட் இல்லத்து அரசர்கள்..
அதற்கு லைக்ஸ் போடும்
வேலையில்லாப் பட்டதாரிகள்..
காலணிக்கு ஏ.சி. ஷோரூமும்
காய்கறிக்குச் சாக்கடை ஓரமும்
இடம் ஒதுக்கும் நம் தூய்மை இந்தியா..
இவ்வளவையும் பேசிக்கொண்டிருக்கத்தான் முடிகிறது
எதிர்க்க முடியவில்லை..
பிறகு நான் யார்..?
இந்திய நாட்டின் குடிமகளா..?
இல்லவே இல்லை..
நானும் ஒரு பிளாட்பாரத்துப் பரதேசிதான்..!

*பா.பிரியதர்ஷினி*
*தமிழிலக்கியம் மூன்றாமாண்டு*